III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.148/2016

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 10-07-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :Rup Raj | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk: | |

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பி.காம் படித்துள்ளேன். எனது தாய் மொழி இந்தி. எனக்கு இந்தி, ஆங்கிலம் மற்றும் தமிழில் பேச மற்றும் எழுத தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்க உத்தரவிடக் கோரி பரிகாரம் கேட்டுள்ளேன். நான் அடகு கடை வைத்து நடத்தி வருகிறேன். பிரதிவாதியின் மனைவி உஷா பல நேரங்களில், பிரதிவாதி அன்பழகன் சில நேரங்களில் உஷாவுடன் எனது கடைக்கு நகை அடகு வைக்க வருவார். அந்த விஷயத்திற்கு மட்டும் தான் வருவார்கள். வேறு எந்த விஷயமும் செய்யவில்லை. நான் நகையை அடகுக்கு பெற்றுக் ெ காண்டு கடன் கொடுக்கும் ெ தாழில் மட்டும் செய்து வருகிறேன். முதலில் நான் கோத்தாரி அன்டு சன்ஸ் என்ற பெயரில் சென்னை வடபழனி பிள்ளையார் கோயில் தெருவில் நடத்திவந்தேன். தற்போது அதே நிறுவனத்தை சென்னை வடபழனி தெற்கு கோயில் தெருவில் வாடிக்கையாளர்களுக்கு வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் எனறால் சரிதான். ( தற்போது சாட்சி நகை கடன் கொடுப்பதாக கூறுகிறார்). நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் எனது வருமான வரி கணக்கில் எனது தொழில் சம்மந்தமான அனைத்து கணக்குகளையும் கூறவேண்டும் என்றால் சரிதான். வருமான வரி சட்டத்தின் கீழ் ரூ.2,00,000த்திற்கு மேல் பண பரிவர்த்தனை செய்யக்கூடாது என்பது எனக்கு தெரியும் என்றால் 2016லிருந்து அந்த விதி அமலில் உள்ளது

எனக்கு தெரியும். ஆதலால் நான் கிரைய ஒப்பந்த முன்னிலை ரூ.10,00,000 பண பரிவர்த்தனை செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)